[10th March 1961

Rural University

*730 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய பிரதேசத்தில் ருத்ராபூரில் உள்ளது போன்ற விவசாயக் கல்வியை முக்கியமாகக் கொண்ட கிராமாந்திரப் பல்கலைக் கழகம் ஒன்று இம் மாநிலத்தில் அமைக்கப்படுமா?

(இ) அப்படியானால், எப்போது, எங்கே, என்ன செலவில்?

(உ) இதற்கு மாநில, மத்திய சர்க்கார்களின் பொறுப்பு என்ன? வெளிநாட்டு உதவி உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*c*) The matter is under examination.

SRI A. VEDARATHNAM: மத்தியப் பிரதேசத்திலுள்ள ருத்ராபூரில் உள்ள ரூரல் யூனிவர்ஸிட்டி எந்த முறையில் நடைபெறுகிறது என்பதுபற்றி அரசாங்கம் ஏதாவது அறிவிக்க முடியுமா? அதுபற்றி தகவல்கள் கேட்டு அறிந்திருக்கிறீர்களா? அல்லது நமது அதிகாரிகளைக் கொண்டு அதைப் பார்த்து இந்தத் திட்டத்தை மேற்கொள்ள யோசித்திருக்கிறீர்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ருத்ராபூர் யூனிவர்ஸிட்டி மத்தியபிரதேசத்தில் அல்ல, உத்தர பிரதேசத்தில் இருக்கிறது. அது நடைபெறுகிறதுபற்றிய தகவல், மற்ற தகவல் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டுதான் நமது ராஜ்யத்தில் ரூரல் யூனிவர்ஸிட்டியை எவ்வாறு அமைப்பது என்பது இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Juveniles

*731 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள இளம் குற்றவாளிகளுக்கான ரெசப்சன் ஹோம்களுக்கு கொண்டுவரப்படும் மைனர்களுக்கு உணவு கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) இது விஷயமாக ரெசப்ஷன் ஹோம்களில் விசாரணை நடந்ததா?

(உ) இது போல் மீண்டும் ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No complaint has so far been received about the non-supply of food to the inmates of any of the Government or private Reception Homes in this State.

(*b*) & (*c*) Do not arise.